**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை: திரு.கே.பாஸ்கர், பி.ஏ., பி.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)**

திருவள்ளுவராண்டு, 2054 சோபகிருது வருடம், ஆடி திங்கள் 09-ம் நாள்

2023-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25-ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.143/2021**

(CNR No. TNTL120000172021)

தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், அச்சங்குட்டம் தெற்கு தெரு, கதவு எண்.2-353 என்ற முகவரியில் குடியிருந்து வரும் லேட்.பரமசிவன் மனைவி, இந்து, 62 வயதுள்ள புஷ்பம்.

..... வாதி

/எதிர்/

1. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், அச்சங்குட்டம் தெற்கு தெருவில் குடியிருந்து வரும் முருகன் மகன், இந்து, 21 வயதுள்ள கணேசன்.

2. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், அச்சங்குட்டம் தெற்கு தெருவில் குடியிருந்து வரும் லேட்.பரமசிவன் குமாரர், இந்து, 38 வயதுள்ள முருகன்.

..... பிரதிவாதிகள்

பிராது தபசில் கண்ட சொத்து வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என 1ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், பிராது தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதியோ, ஷையாரின் வகையாட்களோ எவ்வித கட்டுமானமும் கட்டி எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என 1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதன் தபசில் கண்ட சொத்தையும் சேர்த்து 1ம் பிரதிவாதியின் தாத்தா லெட்சுமணன் நாடார் கடந்த 11.03.2021ம் தேதியில் இந்த 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் இல்லாநிலை என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு 1ம் பிரதிவாதியிடமிருந்து

கிடைக்கக்கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | : | 15.04.2021 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 15.04.2021 |
| வழக்கு மூலம் | : | 10.04.1972, 15.05.2010, 08.03.2021 மற்றும் 11.03.2021 ஆகிய தேதிகளில் அச்சங்குட்டம் கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| வழக்கின் மதிப்பு | : | "அ" பரிகாரத்திற்கு ரூ.20,274/- அதில் பாதி மதிப்பு ரூ.10,137/-<br>"ஆ" பரிகாரத்திற்கு ரூ.5,000/- |
| முத்திரைக்கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டம் பிரிவு 25(b)-ன் படி "அ" பரிகாரத்திற்கு ரூ.304/-ம், 25(d)-ன் படி "ஆ" பரிகாரத்திற்கு ரூ.150/-ம் (கூடுதலாக ரூ.1/-ம் சேர்த்து) மொத்தம் ரூ.455/- முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (25.07.2023) இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சத்யன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாண்டியராஜன் மற்றும் திரு.V.M.பிரபாகரன் ஆகியோர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் 2ம் பிரதிவாதியை பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டும், பிராதை சீர்திருத்தம் செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையிலும், பிராதை சீர்திருத்தம் செய்வதற்கு வாதி தரப்பில் எந்த வித நடவடிக்கை எடுக்காத

காரணத்தாலும், வாதியை அழைத்தும் ஆஜராகாததாலும், வாதியின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்பாணை

1. பிராதை சீர்திருத்தம் செய்வதற்கு வாதி தரப்பில் எந்த வித நடவடிக்கை எடுக்காத காரணத்தாலும், வாதியின் வருகை தவறுகைக்காகவும் இவ்வழக்கு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.
2. பிரதிவாதிகளுக்கு, வாதி வழக்கின் செலவுத் தொகையாக ரூ.510/-ஐ (பிரதிவாதிகளுக்கு வழக்கு செலவு தொகை CRP விதி 96(1)-ன்படி கணக்கிடப்பட்டுள்ளது) செலுத்த வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. (பிரதிவாதிகள் தரப்பில் செலவு விபரப் பட்டியல் தாக்கல் செய்யவில்லை).

## செலவுத் தொகை விபர பட்டியல்

| | வாதி<br>ரூ.பை | பிரதிவாதிகள்<br>ரூ.பை |
|---|---|---|
| வக்காலத்து | - | 10.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | - | 500.00 |
| **மொத்தம்** | **-** | **ரூ.510.00** |

## சொத்து விபரம்

தென்காசி பதிவு மாவட்டம், சுரண்டை சார்பதிவாளர் அலுவலகம், சரகம், அச்சன்குட்டம் கிராமம், நத்தம் சர்வே எண்.234/10 ல் செண்ட் 3 ல் வடபாதி செண்டு 1 1/2 க்கு எல்கை மால் -

ஒரு சதுர அடி ரூ.31/- மொத்த சதுர அடி 654= ஆக மொத்த மதிப்பு 20,274

| | | |
|---|---|---|
| வடக்கில் | - | ரோடு |
| கிழக்கில் | - | வைத்திலிங்கம் மனை |
| மேற்கில் | - | செல்வம் மனை |
| தெற்கு | - | 1ம் பிரதிவாதியின் மனை |

இதற்குள்பட்ட செண்ட் 11/2 (ஒன்னரை)யும் சேர்த்து தபசில் விபரம் சரி.

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒம்/-கே.பாஸ்கர்**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**